Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 2, Special Issue - 3, October 2023 E-ISSN: 2583-0481

# Food and Sense in Tamil Literature

**A. Priya,** Research Scholar of Tamil, Alagappa University, Karaikudi, Tamil Nadu, India.
**ORCID: https://orcid.org/0000-0001-6277-4325**
**Dr. M. Sutha**, Professor of Tamil, Alagappa University, Karaikudi, Tamil Nadu, India.
**ORCID: https://orcid.org/0000-0002-6938-7149**
**DOI: 10.5281/zenodo.8397708**

## Abstract

*The antiquity of Tamil is very much highlighted by the Tamil grammar texts and Tamil literature. The statements like 'enpa' ' enmanar pulavar' stated in "Tolkappium" substantiates that Tamil has a rich and long literary tradition spanning many centuries. It is significant that Tamil literature that rised now and then are not only for aesthetics but also for human life. This can be evidenced from the Sangam period upto the modern literature. From the sangam period, the customs and traditions of the people who lived in harmony with nature and the social environment in which these literatures originated will be well known. Many scholars took Tamil literature all over the world and the literature still stands as evidence of the ancestral way of Tamil life. The food and the style they followed is also familiarly seen in Tamil Literature. Hence, the article probes to know about the food habits of our Tamil ancestors and sentiments through the literary works and critical studies.*

**Keywords:** Food, Sense, Tamil Literature.

## References

[1] Alice, A. (Urai) *Pathitrupathu Moolamum Uraum*. NCBH, Chennai, 2004.
[2] Sutha, M. "*Sangakala Sadangugalum Pengalin Nilaipadum." Pathivugal* Inaya Ithal, ISSN:1481-2991, 2019.
[3] Sutha, M. "*Kappiya Manthar Padaipugalum Karuthuruvakkangalum*" *Vallamai* Inaya Aivithal, ISSN:2348-5531, 2020.
[4] Sutha, M., Ravikumar, R. "*Yeyinargal.*" *Pathivugal* Inaya Ithal, ISSN:1481-2991, 2020.
[5] Sutha, M., Priya, A., Ravikumar, R. "*Kalam Marium Mara Porgal Samooga Kattamaipai Tholurikum Penmozhi Kavithaigal." International Research journal of Tamil*, E-ISSN: 2582-1113. DOI :10.34256/irjt 2021
[6] Subbaiah, Aranga. "*Ilakiya Thiranaivu Isangal Kolgaikal.*" Pavai Publications, 2014.
[7] Dhakshinamoorthi, A. (Urai) *Ingurunooru Moolamum Uraum.* NCBH, Chennai, 2004.
[8] Duraisamipillai, Avai, Su. *Natrinai Moolamum Uraum*. Poombugar Pathipagam, Chennai, 2010.
[9] Duraisamipillai, Avai, Su. *Purananooru Moolamum Uraum*. Poombugar Pathipagam, Chennai, 2010.
[10] Nagarajan, V. *Kurunthogai Moolamum Uraum.* NCBH, Chennai, 2004.
[11] Mohan, R. (Urai) *Pathupattu Muthl Thoguthi Moolamum Uraum.* NCBH, 2004.
[12] Vengadasami Nattar, Na, Mu. (Urai), *Manimegalai.* Ramaya Pathipagam, 2001.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 2, சிறப்பிதழ் - 3, புரட்டாசி 2054 இ - ஐஎஸ்எஸ்என்: 2583-0481

# தமிழ் இலக்கியங்களில் உணவும் உணர்வும்

**ஆ. பிரியா**, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி-3, தமிழ்நாடு, இந்தியா.
ORCID: https://orcid.org/0000-0001-6277-4325
**முனைவர் மு. சுதா**, பேராசிரியர், தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி, தமிழ்நாடு, இந்தியா.
ORCID: https://orcid.org/0000-0002-6938-7149
**DOI: 10.5281/zenodo.8397708**

**ஆய்வுச்சுருக்கம்**

*உணவு, உணர்வு, அறம், கொடை, பண்டமாற்றுதல், குடியோம்புதல், கலகக்குரல், விருந்தோம்பல், நுவணை, தொல்லோர், தீஞ்சாறு, நறவு, தமியர், உயவற்பெண்டிர், உணங்கு, முளிதயிர். தமிழின் தொன்மையை எடுத்துரைப்பன தமிழ் இலக்கண இலக்கியங்கள். பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் இலக்கிய வளம் பெற்றிருந்தது என்பதற்குத் "தொல்காப்பியம்" கூறும் "என்ப" "என்மனார் புலவர்" போன்ற கூற்றுகள் சான்றாகும். காலம் தோறும் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் கலைக்காக மட்டுமின்றி அவை வாழ்க்கைக்கான இலக்கியங்களாகவும் இருந்தமை குறிக்கத்தக்கது. சங்க காலம் தொடங்கி இக்கால இலக்கியங்கள் வரை இதற்குச் சான்று காட்டலாம். சங்க காலம் தொட்டு இயற்கையோடு இணைந்து அகமும் புறமும் வாழ்வியல் பொருளாகக் கொண்டு வாழ்ந்த மக்களின் பழக்க,வழக்கப், பண்பாடுகளை, அவ்விலக்கியங்கள் தோன்றிய சமூகச் சூழலை அறிய ஏதுவாய் இருக்கும் இவ்விலக்கியங்களின் பண்பாட்டுச் சிறப்பினை மேலை நாட்டறிஞர் மாக்ஸ் முல்லர் போன்ற போற்றுவது கொண்டு அறியலாம். மனிதர்கள் தமிழர் பண்பாட்டை உலகமெல்லாம் கொண்டு செல்ல, இலக்கியங்கள் முன்னோர்களின் வாழ்வியல் முறைகளுக்கு சான்று காட்டி இன்றளவும் நிற்கின்றன. அவ்வகையில் இலக்கியங்கள் வழி அறியலாகும் நம் முன்னோர்களின் உணவு முறைகள் குறித்தும் அதில் ஊடுருவி நிற்கும் உணர்வினையும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.*

**திறவுச்சொற்கள்:** தமிழ் இலக்கியம், உணவு, உணர்வு.

**முன்னுரை**

மனிதனின் அடிப்படை உரிமைகள் என்று கூறப்படுவன மூன்று. உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம். இதனை அன்றே மணிமேகலை,

**அறமெனப்படுவது யாதெனக் கேட்பின்**
**மறவா திதுகேள் மன்னுயிர்க்கெல்லாம்**
**உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டதில் (மணிமேகலை, 25: 228-230)**

என உணவளிப்பதை வாழ்வியல் அறமாக முதனிலைப்படுத்துகிறது. இதில் முதலில் பெறுவது இடம் பெறுவது உணவு. உயிரினத்தின் முக்கியமான தேவை உணவு. அவற்றிலும் ஆரோக்கியமான உணவு. அத்தகைய உணவுகளை உண்டு வாழ்ந்ததுடன் "செல் விருந்தோம்பி வரு விருந்தினை நோக்கி" (குறள் 86) நிற்கும் மாண்புடைய மக்களை இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றன. இவை தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்பின் அடையாளமாக விளங்குகின்றன

**உணவும் உணர்வும்**

உணவும் உணர்வும் மானிட வாழ்வில் முக்கிய பங்காற்றுகின்றன. அதை தவிர்த்து வாழ்க்கை இல்லையாம். அதனை அரங்க. சுப்பையா தனது *இலக்கியத் திறனாய்வு இசங்கள் கொள்கைகள்* எனும் புத்தகத்தில்,

> **உணர்ச்சி, உணர்வு என்ற இரு சொற்களும் இலக்கியத் திறனாய்வில் பயன்படுத்தப்படுகின்றன. எனினும் இவை இரண்டிற்கும் சிறு வேறுபாடுகள் உள்ளன. இரண்டும் வெவ்வேறு பண்பினைக் கொண்டுள்ளதாகக் கூறுவர். இன்பம், துன்பம் இவற்றை அறிவு சார்ந்த நிலையில் உண்டாக்கும் கருத்து உணர்வு என்று பெயர். காதல், சோகம், கோபம், கவலை முதலியவற்றை மெய்ப்பாட்டு வடிவில் காட்டுவது உணர்ச்சியாகும். உணர்வு அறிவின் அடிப்படையில் உண்டாவது. இது மனத்தின் செயல். உணர்ச்சி என்பது புலன்களின் வழி வெளிப்படும் மெய்ப்பாடுகள் ஆகும். உணர்வு வெளியில் தெரிவதில்லை. உணர்ச்சியை உடல் காட்டிவிடும். (ப. 103)**

உணவுடன் நெருங்கிய தொடர்புடையது இவ்வுணர்வும் உணர்ச்சியும். உணவு என்பது அடிப்படை தேவை. அதில் உண்ணுதல் என்பது மட்டுமல்லாமல், உணவின் வழி, அவ்உணவு அளித்தலின் வழிஅன்பு, பாசம், கருணை, மனித நேயம், வறுமை, செம்மை, அவலம், உறவு மேம்பாடு எனப் பல உணர்வுகள் உள்ளடங்கி இருப்பதை இவ்விலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. அவை விருந்தோம்பலாக போற்றப்பட்டதையும், அப்பண்பாடு இன்றளவும் நீட்சி பெற்றிருப்பதனையும் இலக்கியங்கள் வழி அறியமுடிகின்றன.

**பிறர்நலம் பேணும் கருணை**

உடலுக்கு நல்லன பயக்கும் உணவுகளைச் சமைத்துத் தானும் உண்டு பிறருக்கும் வழங்கிய பண்பில் தன்னலம் கருதாது பிறர் நலம் கருதும் நல்லுணர்வு மேம்பட்ட மக்களை சங்க இலக்கியங்கள் முதலான இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

நற்றிணைப்பாடலொன்று இரவில் வீட்டிற்கு வருகை தந்த விருந்தினருக்கு நெய்யுடன் கூடிய கொழுப்பு உடைய ஊனைச் சமைத்துத் தந்த தலைவியைச் சுட்டுகிறது

> **எல்லி வந்த நல் இசை விருந்திற்கு**
> **கிளர் இழை அரிவை! நெய் துழந்து**
> **அட்ட விளர் ஊன் அம்புகைஎறிந்த நெற்றி**
> **சிறு நுண்பல்வியர் பொறித்த**

**குறுநடைக் கூட்டம் வேண்டுவோரே (நற்றிணை, 41)**

என்பது அப்பாடல். இரவின் கண் வந்த நல்ல புகழையுடைய விருந்தினர் உண்ணவேண்டி நெய்யை அளாவ விட்டுக் கொழுவிய தசையைச் சமைத்ததால் புகை படிந்த நெற்றியின்கண் சிறிய நுண்ணிய பலவாய வியர்வைநீர் தோன்றப்பெற்றத் தலைவியை இப்பாடல் கண்முன் நிறுத்துகிறது. இரவோ, பகலோ அயர்வு கொள்ளாது எப்பொழுதும் தங்களைத் தேடி வருவோரின் பசி தீர்க்கும், அதுவும் தரம் குறையாத உணவினை அளித்து,உளமறிந்து பசியாற்றும் பண்டை மக்களின் பிறர்துன்பம் பொறா தன் துன்பம் கருதா பண்பினைக், கருணையுணர்வை இப்பாடல் கொண்டு அறிய முடிகின்றது .

**ஒற்றுமையுணர்வு**

பதிற்றுப்பத்தில் காணலாகும்,

**உண்மின் கள்ளே! அடுமின் சோறே!**

**ஏறிக திற்றி! ஏற்றுமின் புழுக்கே!**

**வருநர்க்கு வரையாது பொலங்கலம் தெளிர்ப்ப (பதிற்றுப்பத்து, 18)**

என்ற பாடல் வழி அழகிய கூந்தலை உடைய விறலியரே! கள்ளை உண்பீராக, சோற்றைச்சமைப்பீராக, திண்ணப்படும் ஊன் கறியை அறுப்பீராக, கறிவகைகளை உலையில் ஏற்றுவீராக வந்தவர்களுக்கெல்லாம் அளந்து பார்க்காமல் வழங்குங்கள். அடுப்பு அமராது இருக்கட்டும் என உணவினை ஒன்று கூடிச் சமைத்துக்உண்டதையும், கூடிக்களித்து உண்டு மகிழும் ஒற்றுமை உணர்வும் வந்தோர்க்கெல்லாம் வாரி வழங்கும் வளமும் கொடையுணர்வும் மேலோங்கி இருந்தமையை அறியமுடிகின்றது.

உடல் வளத்துக்கு ஏற்ற உணவை சமைத்து வந்ததுடன் அவ்வுணவைப் பாகுபாடு காட்டாது பிறருக்கும் வழங்கி வாழ்ந்த மக்களை இலக்கியங்கள் காட்டுகின்றன. சேரநாட்டு மக்களின் முக்கிய உணவாக சோறு இருந்ததை “அடுமின் சோறே” என்பது சுட்டுகிறது. நிலத்திற்கு ஏற்ப நெல் வகை காணப்பட்டுள்ளன. மருதநில மக்கள் செந்நெல் சோறும்,மலை நில மக்கள் வெண்ணெல் சோறும் உண்டுள்ளனர். இதனையும் பதிற்றுப்பத்து அறிவிக்கிறது. அதுபோல உடலுக்கு வலுபெறும் வண்ணம் ஆட்டிறைச்சி உணவை சோற்றுடன் கலந்து உண்ணும் பக்குவத்திற்கு உணவாக்கி உண்டுள்ளனர். இவை மட்டுமல்லாது திணை மா விரும்பி உண்ட உணவாக இருந்துள்ளது. தன் வீட்டிற்கு வந்த விருந்தினருக்கு தினைமா அளித்து மகிழ்ந்துள்ளனர். இது “நுவணை” என அழைக்கப்பட்டுள்ளது. இடித்து நுண்ணிதாக்கப்பட்ட மாவு என்பதால் “மென்றினை நுவணை” (ஐங்குறு., பா. 285) எனப்பட்டுள்ளது.

பழங்களும் கிழங்குகளும் முக்கிய உணவுப் பொருள்களாக இருந்துள்ளன. இவற்றையும் தாங்கள் மட்டும் உண்டு மகிழாது பிறருக்குப் பயன்படும் வண்ணம் பாதுகாத்துத்வந்துள்ளனர். இவை வழிச்செல்வோருக்குக் களைப்பைப் போக்கப் பயன்பட்டுள்ளன.“தேன் நிறைந்த முட்டை போன்ற வடிவம் உடைய முதிர்ந்த பலா பழங்கள் உணவாகியுள்ளன” என்பதனைப்

பதிற்றுப்பத்து கூறுகிறது. எந்த ஒரு செயலும் பிறருக்குப்பயன்படுவதாக அமைப்பது தமிழர்களின் தனிச்சிறப்பு. உணவுப்பொருளும் அதற்கு விதிவிலக்கல்ல. நெல் பயிரிடும் நிலத்தில் பாதுகாப்பிற்காகக் கரும்பினை வேலியாக அமைத்துள்ளனர். வீட்டிற்கு வரும் விருந்தினருக்கு நெல் சோறும்,கருப்பஞ்சாறும் கொடுத்துள்ளனர். கரும்பின் தீஞ்சாறு விரும்பினீர் மிசைமின் (பெரும்., பா. 259-263) எனப்பெரும்பாணாற்றுப்படை பாடல் கூறுவது நோக்கத்தக்கது.

**சமத்துவ உணர்வு**

எந்த உணவையும் தான் மட்டும் உண்ணும் பழக்கமற்றவர்கள் நம் முன்னோர்கள். மக்கள் மட்டுமின்றி நாடாளும் மன்னர்களும் தன்னைத் தேடி வருபவர்களின் பசியை முதலில் ஆற்றுபவர்களாக இருந்திருக்கின்றனர்.அவ்வுணவில் பாகுபாடின்றி தாங்கள் உண்ட உணவையே அவர்களுக்கும் அளித்த சமத்துவ உள்ளத்திற்கும் இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. தமிழில் எழுதப்பட்ட சமையல் நூல் ஒன்றை சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது. ஓய்மா நாட்டு நல்லியக்கோடன் பாணர்களுக்கு விருந்து படைக்கும்போது இந்த நூலில் உள்ள முறைகள் வழுவா வண்ணம் முறைப்படி சமைக்கப்பட்ட உணவை அவர்களுக்கு விரும்பிய வண்ணம் தானே அளித்தான் என்கிறது இப்பாடல்.

**பூவிரி கச்சைப் புகழோன் தன் முன்**
**பனிவரை மார்பன் பயந்த நுண்பொருள்**
**பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசில்**
**வாள்நிற விசும்பின் கோள்மீன் சூழ்ந்த**
**இளங்கதிர் ஞாயிறு என்னும் தோற்றத்து**
**விளங்கு பொற்கலத்தில் விரும்புவான் பேணி**
**ஆனா விருப்பின் தான் நின்று ஊட்டி (சிறுபாண்.,பா. 238-245)**

மன்னன் இரவலரை உபசரிக்கும் பாங்கு பற்றிக் குறிப்பிடும்போது “மாசு இல்லாத மூங்கிலின் தோலை உரித்தாற் போன்ற ஆடையை உடுக்கச் செய்து பாம்பு சினந்த எழுந்தது போன்ற எழுச்சியைத் தரும் கள்ளைக் கொடுத்து… வீமசேனன் எழுதிய நுண்மையான சமையல் குறிப்புகளுடைய நூலினின்றும் வழுவாது தான் விரும்பும் பல்வேறு உணவுவகைகளைப் பொற்கலங்களில் நிரப்பி நும்மீது மிகுகின்ற விருப்பத்தால் தானே நின்று நும்மை உண்ணச் செய்வான்” என்பது இதன் பொருளாகும். பசியால் நாடி வந்த பாணர்களின் குடும்பமே பசியின்றி வாழ வளம் கொடுத்து வளம் கொடுத்தபெருந்தன்மையையும், பரந்த மனப்பான்மையையும் சுட்டும் சிறுபாணாற்றுப்படை மன்னன் தன்னைப்போலவே பிறரையும் கருதிப்போற்றும் எண்ணம் கொண்டிருந்ததையும் எடுத்துக்காட்டுகிறது.

**விருந்தோம்புதல்**

விருந்தோம்புதல் என்பது தமிழர்களின் உயிர்ப் பண்பாக இருந்துள்ளது. விருந்தினருக்குத் தேக்கிலையில் விருந்து படைத்து மகிழ்ந்துள்ளனர். பண்டைக்கால மக்களின்

உணவு வகைகள்“தேன், மீன், கிழங்கு, நெய்,நறவு, இறைச்சி, நெல், மூங்கில் அரிசி, சோறு, பலா, மா, புளி நீர், மோர், உப்புக் கண்டம், தினை அரிசி, வரகரிசி, நண்டு, அவல், இளநீர், வாழைப்பழம், நுங்கு, வள்ளிக்கிழங்கு” என நீண்டு செல்கிறது .

இவை அனைத்தும் தங்கள் உடல் நலனுக்காக மட்டுமல்லாமல் பிறருக்கும், வழிநடைச் செல்வோருக்கும் கூட வழங்கி பேணியுள்ள உள்ளம் நிறைந்த அன்பு உணர்வினை, போற்றிப்புரவும் தன்மையினை இலக்கியங்களில் காணமுடிகின்றன. பிணியுற்றோர்களுக்குத் தகுந்த உணவை அவர்கள் உடல்நலம் கருதி கொடுத்தத் தன்மை, குழந்தைகளுக்கு ஏற்ற உணவு அளித்தல், படிவவுண்டிப் பார்ப்பன மகனே எனவிருப்ப உணர்வை கட்டுப்படுத்தும் விரதஉணவான படிவஉண்டி என்னும் உணவு முறைஎனப் பல உணவு முறைகள் மன உணர்வுகளும் உடல் நலத்துடனும் தொடர்பு கொண்டிருந்தமையைக் குறுந்தொகை, முல்லைப்பாட்டு போன்ற இலக்கியங்கள் சுட்டுகின்றன.

**பரந்த மனவுணர்வு**

நிலமும் நீரும் இன்றியமையாதது. அதனைப் பாதுகாப்பது நம் கடமை. அதனை புறத்திணையில்,

**நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**
**உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே**
**நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு**
**உடம்பும் உயிரும் படைத்திசி னோரே (புறம்., பா.18)**

உடம்பு உணவால் அமைந்த பிண்டம். உடம்பில் உயிர் இருக்க வேண்டும் என்றால் உணவு வேண்டும். நிலமும் நீரும் இணைந்த கூட்டுப்பொருள் தான் உண்ணும் உணவு. நீரைச் சேர்த்து வைத்தால் விளைச்சலைப் பெருக்கலாம். எனவே, நிலத்தில் நீர் தங்கும்படி சேமித்து வைத்தவர் உடலில் உயிரைப்படைத்தவர் ஆவார் என்றும் படைப்புக் கடவுளாவார் என்றும் எடுத்துரைக்கும் இப்பாடல் உணவின் முக்கியத்துவத்தையும் அதனைப்பாதுகாக்க வேண்டிய கடமையுணர்வையும் சுட்டுகிறது.

மகாபாரதப் போரின்போது போர் வீரர்களுக்குப் பெருஞ்சோறு அளித்த வகையில் “பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன்” என்று சேர மன்னன் பட்டம் பெற்றமையை காணும்போது மன்னனின் பரந்த மனப்பாங்கையும் “உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோராகக்” கருதி வாழ்த்தும் பண்பு மக்களிடம் நிறைந்திருந்தமையையும் இலக்கியங்கள் வழி அறியமுடிகின்றன. உலகின் அறம், ஒழுக்கம், மேன்மை அனைத்தும் உணவிலே அடங்கி இருப்பதை தமிழர்களின் உணவுப் பழக்க வழக்கங்களும் அதனை பிறருக்குக் கொடுத்து விருந்தோம்பும் பண்பிலும் அறிய முடிகின்றன.

**எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு**

**தேமா மேனிச் சில்வளை ஆயமொடு**

**ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவீர் (சிறுபாண்., பா. 175-177)**

என்ற பாடல் எயிற்றியர் அளித்த விருந்தினைக் கூறுகிறது. “எயிற்றியரால் சமைக்கப்பட்ட இனிய புளிக் கறியையும் விரும்பத்தக்கச் சோற்றையும் ஆமானுடைய சூட்டிறைச்சியையும் அனைவரும் பெறுவீர். மேலும் கைக்குத்தல் அரிசிச்சோறு, வயலிலே பிடித்த நண்டு, கொல்லைப்பீர்க்கங்காய்க் கொண்டு சமைத்துத் தாமும் உண்டு விருந்தினருக்கும் தருவர் உண்ணுவீர்” (மு.சுதா, பக்,1-3) என்பதிலிருந்து உணவு அளித்தல் என்பது மக்களின் வாழ்வில் இயைந்த இயல்பாக, அடி மன அன்பு உணர்வாக இருந்தமையைப், பாகுபாடின்றி விருந்தோம்பி மகிழ்ந்த நற்பண்பைக் காணமுடிகின்றது.

**குடியோம்பும் குணம்**

மன்னுயிர்க்கெல்லாம் உழவே உயிர். அதனைப் பாதுகாப்பதே நல்ல அரசின் கடமை என்பதை,

**வருபடை தாங்கிப்பெயர்ப்புறத்தார்த்துப்**
**பொருபடைதரூவும் கொற்றமும் உழுபடை**
**ஊன்றுசால் மருங்கி னீன்றதன் பயனே...**
**பகடு புறந்தருநர் பாரமோம்பிக்**
**குடிபுறந் தருகுவை (புறம்., பா.35)**

எனப் புறநானூறு சுட்டுகிறது. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை வெள்ளைக்குடி நாகனார் பாடும் போது உன் ஆட்சி உழவரின் உழைப்பால் விளைந்தது. மழை பொய்த்தாலும், வருவாய் குறைந்தாலும், இயற்கை குறைந்தாலும், செயற்கை தோன்றினாலும் உலகம் அரசனைத்தான் பழிக்கும். எனவே, உழவரைப் பேணினால் பகைவரும் பணிவர் என்றுரைத்து மன்னவன் நிலவரியைத் தள்ளுபடி செய்தான் என்கிறது புறநானூறு. அடிப்படை உணவைப்போற்றுவது அரசனின் கடமை என்பதையும் ,அதைச் சுட்டிக்காட்டியதும் தவறுணர்ந்து குடியோம்பும் மன்னனின் சிறந்த பண்பினையும் தம் மக்கள் நலம் விரும்பும் தகைமையையும் இப்பாடல் எடுத்துக் காட்டுகிறது.

**பண்டமாற்றிப் பகிர்ந்துண்ணும் பண்பு**

ஒருவன் வேட்டையாடிக் கொண்டு வந்த இறைச்சியை உழவனிடம் கொடுத்து ஈடாக நெல்லை மாற்றிக் கொண்டதையும், உழவனுக்குத் தயிரைக் கொடுத்து இடைச்சியர் நெல்லை பெற்றுக் கொண்டதை உலகியல் உணர்ந்த கோவூர்கிழார் தம்பாடல்களில் பதிவு செய்துள்ளார். நலங்கிள்ளியைப் பாடிய புலவர்,

**கானுறை வாழ்க்கைக்கதநாய்வேட்டுவன்**
**மான் தசை சொரிந்த வட்டியும் ஆய்மகள்**
**தயிர் கொடு வந்த தசும்பும் நிறைய**
**ஏரின் வாழ்நர் பேரில் அரிவையர்**

**குளக்கீழ் விளைந்த களகொள் வெண்ணெல்**
**முகந்தனர் கொடுப்ப உகந்தனர் பெயரும்**
**தென்னம் பொருப்பன் நன்னாடு (புறம்., பா. 33)**

என்று பாடுகிறார். தன்னிடம் தேவைக்கு அதிகம் இருக்கின்ற ஒன்றைப் பிறருக்கு கொடுத்துத் தன்னிடம் இல்லாத ஒன்றை அவர்களிடம் இருந்து பெற்றுப் பயன்படுத்தியது வெறும் பண்டமாற்று முறை மட்டுமல்ல, உணவை மட்டுமல்ல, தம்குடி பேணும் உணர்வையும், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று உறவைப் பேணும் பண்பையும் சுட்டிநிற்கிறது. சங்க மக்களின் உணவுப் பொருட்கள் அனைத்தும் நிலம் சார்ந்தும், தொழில் சார்ந்தும் இயற்கையாகக் கிடைக்கக்கூடியதும் ஆகும். இவை தமிழர்களின் இயற்கையோடு இயைந்த வாழ்வியலைச் சுட்டுகிறது.இலக்கியங்கள் காட்டும் உணவு குறித்தப் பதிவுகள் வெறும் உணவாக மட்டுமின்றி மனித மன உணர்வினைச்எடுத்துக்காட்டி அமைந்துள்ளதை அறிய முடிகின்றது.

**உறவுகளைப் பேணுதல்**

பெருஞ்சித்திரனார் பாடல்களில் தனது குடும்ப வறுமையை அவர் சுட்டும்போது தன் தாய், தந்தை முதலாகக் குழந்தைகள் வரையிலான வறுமைக் கொடுமையினை எடுத்துக்காட்டும் பாடலொன்று புறநானூற்றில் இடம்பெற்றுள்ளது. இது உணவின் தேவையையும், கூடி வாழ்ந்த உறவைப் பேணும் உணர்வினையும் உணர்த்தி நிற்கின்றது. “இன்றைய காலத்தில் காணப்படும் தனிக்குடித்தனம் மற்றும் கூட்டுக் குடித்தன முறைகள் பண்டைக் காலத்திலிருந்து வந்தமையே.” (மு. சுதா, ப. 3). குறுந்தொகை பாடலொன்று,

**முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கங் கழாஅது டீஇக்**
**குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்**
**தான் றுழந் தட்ட தீம்புளிப் பாகர்**
**இனிதெனக் கணவ னுண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே (குறுந்., பா. 167)**

என்ற பாடல் தலைவன் தலைவியின் தனிக் குடித்தன வாழ்வையும், அதில் மேம்பட்டு நிற்கும் புரிதலையும், ஒருவர் மீது ஒருவர் கொண்ட ஒப்புயர்வற்றக் காதலையும் வெளிப்படுத்துகின்றது. அதைச் செவிலி கண்டு மன நிறைவு பெற்றதாகக் கூறப்படுவது தாய்மையின் மேன்மையைச் சுட்டுகிறது. இங்கு உணவே உணர்வு வெளிப்பாட்டிற்கும் பரிமாற்றத்திற்கும் உறவின் மேம்பாட்டை உணர்த்தவும் காரணியாக நிற்பதை அறியமுடிகின்றது.

**அறவுணர்வு**

தமிழர் வாழ்வில் உணவு அறஉணர்வோடு தொடர்புடையது. விருந்து என்பது வேறு உறவு என்பது வேறு. முன்பின் அறியாத புதியவர்கள் விருந்தினர். கோவலன் பிரிந்ததை விட விருந்தினரைப் போற்ற முடியாத நிலையை எண்ணி வருந்துகிறாள் கண்ணகி. விருந்தைப் போற்றி பேணும் பழம் தமிழரின் மரபு, ஈகை, உணர்வு இங்கு பெறப்படுகிறது.

**வெறுப்புணர்வு**

**பல்சான்றீரே பல்சான்றீரே**
**செல்கெனச் சொல்லாது ஒழிகென விலக்கும்**
**பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான்றீரே…**
**…அடை இடைக் கிடந்த கைபிழி பிண்டம்**
**வெள்என் சாந்தொடு புளிப்பெய்து அட்ட**
**வேளை வெந்தை,வல்சி ஆகப்**
**பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்**
**உயவற் பெண்டிரேம் அல்லேம் மாதோ (புறம், 246)**

சான்றீரே, வெள்ளரிக்காய் விதைபோல் தோன்றும் நெய்சேர்க்காமல் இலையில் கைப்பிடி அளவு அரிசியில் வெள்ளை எள் சாந்தம் சேர்த்துப் புளிஊற்றி வெந்த சோற்றை மட்டும் உண்டு பரல் கற்களைப் பாயாக்கி உறங்கும் பெண் நான் இல்லை" எனும் பெருங்கோப்பெண்டுவின் பாடல் கணவனை இழந்த பெண்ணின் சங்ககால வாழ்வியலை மட்டும் சுட்டவில்லை. அப் பெண்ணிற்கான உணவை மட்டும் சுட்டவில்லை. பெண்ணுக்கு எதிரான சமூகத்தின் மீதான வெறுப்புணர்வையும் சுட்டிநிற்கின்றது. உணவைக் கூறி அதன்வழி தன் அவலத்தை உணர்த்தும் கலகக்குரல் . (மு.சுதா, பக். 1-11)

**அவலவுணர்வு**

வறுமையை ஒழிக்க வள்ளல்களைத் தேடிய அலைந்தவர்களை காணும்போது அவர்களின் திறனை விட உணவின் தேவை உணர்த்தும், வறுமையை காட்டும் அவல உணர்வேஉணரப்படுகிறது.பசியின் கொடுமை, பசியினால் உடல் வற்றிய சுற்றத்தரின் பசி தீர்க்க வருந்துகின்ற பாணன், என்னை வருத்தும் பசி தீர்க்க நீ எமக்கு உதவுவதே உண்மையான ஈகை (புறம்., பா. 136) எனும் போது அடிப்படை தேவை உணவு என்பதும் பசி வந்தால் பத்தும் பறந்து போகும் எனத் தன்மானம் இழந்து கையேந்தும் அவலம் அறியப்படுகிறது. குமணனே உணவின்றி வயது முதிர்ந்த தாய் நூல் போன்று மெலிந்து விட்டாள். பசியால் வாடிய எனது மனைவி வற்றி உலர்ந்து போன மார்புடன் வருந்தி இருக்கின்றார். பிள்ளைகள் என் மனைவியின் வற்றிய மார்பில் பாலருந்த, பாலின்றி வருந்துகின்றன. எனது மனைவியோ குடும்பத்தினரின் பசியைப் போக்கக் கீரையின் இளம் தளிரைப்பிடுங்கி வந்து அவிக்கின்றாள். அதில் போடுவதற்கு உப்பின்றி அதனைத் தின்றோம். நீ குன்றிமணி அளவு பொருள் தந்து எனது குடும்ப வறுமையைப் போக்க வேண்டும் எனும் பாடல் புலவரின் உச்சபட்ச வறுமை நிலையைச் சுட்டுகின்றது.இப்பாடல் குடும்பதினரின் உணவுத் தேவையைச் சுட்டுவதோடு மட்டுமல்லாமல் அவர்கள் உண்ட உணவினைச் சுட்டிக்காட்டுவதன்வழி வறுமையால் ஏற்பட்ட அவலம் நிறைந்த அவரது உள்ளத்துணர்வைச் சுட்டிநிற்பதை அறியமுடிகின்றது.

**உண்டால் அம்ம, இவ்வுலகம் இந்திரர்**

**அமிழ்தம் இயைவ தாயினும் இனிது எனத்**
**தமியர் உண்டலும் இலரே (புறம்., பா. 182)**

தனித்து உண்ணாத பண்பு, அமிழ்தமே கிடைத்தாலும் தான் மட்டும் உண்ணாது பிறருக்கு கொடுக்கும் மனிதநேயம், "அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்" (நற்றிணை., பா.142). நடு இரவில் வந்தாலும் வரவேற்று உணவிடும் நல்லியல்பு,

**குரல் உணங்கு விதைத் தினை உரல்வாய்ப் பெய்து**
**சிறிது புறப்பட்டன்றோ இலளே (புறம்., பா. 333)**

தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையைஉரலில் இட்டுக்குத்தி விருந்தினருக்கு உணவளித்த தலைவியின் கருணையுணர்வு, "பலர் புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ" (குறுந்., பா.118). இல்லத்து வாயிலை அடைப்பதற்கு முன் உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா! என்று கேட்டுப் பசியாற்றும் பண்பு, ஈகை உணர்வு என உண்ணும் உணவும் அதில் இழையோடும் உணர்வுகளுமே தமிழரின் அடையாளங்களாக இன்றளவும் உலக அளவில் போற்றப்பட்டு வருகிறது இது தமிழரின் பண்பாட்டுச் சிறப்பு. இல்லறம் போற்றும் நல்லறம். உணவு வழங்குதலும் உணர்வுப் பரிமாற்றமும் அறமெனப் போற்றப்பட்டதைத் தமிழ் இலக்கியங்கள் காலம் தோறும் பதிவு செய்து தமிழர்களின் அறவாழ்வியலுக்குச் சான்று காட்டி நிற்கின்றன. அறமெனப்படுவது யாதெனப்கேட்பின் என்று கூறிய மணிமேகலையில் உணவு முதலிடம் பெறுவதற்கான காரணம் அது உணவு வழங்குதல் என்பதால் மட்டுமல்ல, பசியாற்றுதலால் மட்டுமல்ல, அடிப்படைத் தேவையால் மட்டுமல்ல, பண்புகளின் உணர்வுகளின் பரிமாற்றமாகவும் அறமே பசியாற்றும் பண்பு என்பதை உணர்த்துவதற்குமாம்.

**முடிவுரை**

இலக்கியங்கள் சுட்டப்பட்டுள்ள உணவு குறித்த பதிவுகள் வெறும் உணவாக மட்டுமல்லாமல் அது வாழ்வோடு இயைந்த தன்மையை, அவ்வுணவு இன்றிப் போனச் சூழல் இருந்தமையை இல்லாதோர்க்கு இருப்போர் கொடுத்து உதவ வேண்டும் என்பதையும் உணர்த்துகின்றன. வாழ்க்கையைப் பதிவு செய்த இலக்கியங்கள் தோன்றிய பொற்காலமெனினும் வளமும் வளமற்ற சூழலும் காணப்பட்ட ஒரு ஏற்றத்தாழ்வு கொண்ட சமூகத்தையும் இவ்வுணவுப் பதிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. இச்சூழலிலும் பிறர் துன்பம் தன்துன்பமாய்க் கருதி உதவிய மக்கள், வறுமையிலும் செம்மையாய் வாழ்ந்த மக்கள் தமிழர்களின் பண்பாட்டு அடையாளமாய் இலக்கியங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

**துணைநூற்பட்டியல்**

[1] ஆலிஸ், அ. (உரை)*பதிற்றுப்பத்து மூலமும் உரையும்*, (2004), நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

[2] சுதா, மு. "*சங்ககாலச் சடங்குகளும் பெண்களின் நிலைப்பாடும்.*" *பதிவுகள்* இணைய இதழ் ISSN:1481-2991, 2019.

[3] சுதா, மு. *“காப்பியமாந்தர் படைப்புகளும் கருத்துருவாக்கங்களும்.”* *வல்லமை* இணைய ஆய்விதழ், ஆய்வுக்கட்டுரை, ISSN:2348-5531, 2020.

[4] சுதா, மு., இரவிக்குமார், இரா. *“எயினர்கள்.”* *பதிவுகள்* இணைய இதழ் ISSN:1481-2991, 2020.

[5] சுதா, மு., பிரியா. ஆ., இரவிக்குமார், இரா. *“களம் மாறியும் மாறா போர்கள் சமூகக் கட்டமைப்பைத் தோலுரிக்கும் பெண்மொழிக்கவிதைகள்.”* *சர்வதேசத் தமிழ் ஆய்விதழ் இதழ்*, E-ISSN: 2582-1113. DOI :10.34256/irjt 2021

[6] சுப்பையா, அரங்க. *இலக்கியத்திறனாய்வு இசங்கள் கொள்கைகள்.* பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2014.

[7] தட்சிணாமூர்த்தி, அ. (உரை) *ஐங்குறுநூறு மூலமும் உரையும்.* நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

[8] துரைசாமிப்பிள்ளை, ஔவை சு. *மூலமும் உரையும் நற்றிணை.* பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2010.

[9] துரைசாமிப்பிள்ளை, ஔவை சு. *மூலமும் உரையும் புறநானூறு.* பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2010.

[10] நாகராசன், வி. (உரை) *குறுந்தொகை மூலமும் உரையும்.* நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

[11] மோகன், இரா. (உரை), *பத்துப்பாட்டு மூலமும் உரையும்.* நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

[12] வேங்கடசாமிநாட்டார், ந, மு. (உரை) *மணிமேகலை.* சாரதா பதிப்பகம், சென்னை, 2001.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.